# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
# அசல் வழக்கு எண்.110/2022

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் சனிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.11.2023 | தந்தை பெயர்: | கோவிந்தசாமி |
| பெயர்: | நடராஜன்<br>(PW-2 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 58 /2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 04.11.2023.</u>**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் வாதி யார் என்றால் ரெங்கநாதன். யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாலாஜி மற்றும் பலர். பாலாஜியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் மச்சேந்திரன். பாலாஜியின் தகப்பனார் என்ன பணி செய்து ஓய்வு பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் வருவாய் ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றார். தாவா சொத்து மற்றும் அதன் அருகில் உள்ள சொத்துக்கள் தருமபுர ஆதீனத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதிக்கும்

வாதிக்கும் நடைபெற்ற பரிவர்த்தனைகள் நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் தாவா சொத்து அமைந்துள்ள தெருவில் தான் வசித்து வருகிறேன். 1-ம் பிரதிவாதி காணாமல் போனது சம்பந்தமாக அவரது மாமனார் ஆட்கொணர்வு நீதிபேராணை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். காவல் துறையில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படக்கூடாது என்ற அடிப்படையில் தாவா சொத்து பூட்டப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எவ்வித தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டாவே பூட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1-ம் பிரதிவாதியிடமிருந்து வாதி வசம் எடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

1, 2 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

மறுவிசாரணை இல்லை.